**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.**

**அனுப்புநர்**

திரு. தயானந்த் கட்டாரியா, இஆப
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்

1) கூட்டுறவு சங்கங்களின்
பதிவாளர்/மாநில தேர்தல் அலுவலர்

2) அனைத்து
செயற்பதிவாளர்கள்/மாநில தேர்தல்
அலுவலர்கள்

ந.க.344/2018/கூதே.5 நாள்: 05.09.2022

ஐயா,

பொருள்: கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தலுக்கான நடத்தை விதிகள் (Code of Conduct) அமுல்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை: ஆணையத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள் 05 .03.2018.

******

கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகளுக்குட்பட்டும் (இனி சட்டம் மற்றும் விதி எனப்படும்) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி ஆணையம்) நடத்த வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, ஆணையத்திற்கு விதி 52–A(9) ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கைக்கொண்டு பார்வையில் கண்ட கடிதத்தின் படி தேர்தல் நடத்தை விதிகளை ஆணையம் அறிவித்தது.

அவ்விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு இணைப்பில் கண்டுள்ளவாறு புதிய நடத்தை விதிகள் அறிவிக்கப்படுகின்றன. இனிவரும் கூட்டுறவு சங்கத் தேர்தல் அறிவிப்புகளுக்கு இவ்விதிகள் பொருந்துவதாகும்.

தவிரவும் ஆணையத்தால் தேர்தல் திட்டம் வழங்கப்பட்டு தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்ட சில சங்கங்கள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நடத்தை விதிகளை கைக்கொள்ளவில்லை என்றும், அவ்வாறு நடத்தை விதிகளை கைக்கொள்ளாது அவற்றிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சங்க நடவடிக்கைகள் சட்டத்தின் முன் நிலை நிறுத்ததக்கதல்ல (Un Enforceable) என்றும், சட்ட விரோதமானதும், (Illegal, Ultra Vires) தாவாக்குரியதுமாகும் ( Arbitrary) என்றும் பாதிக்கப்பட்ட சிலர் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்ததுடன், ஆணையத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு ஆணையத்தால் சங்க நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட சட்டப்பூர்வ கட்டளைகளை (Law full Order Direction) செயல்படுத்தாது இருப்பது சட்டப்பிரிவு 157–ன்கீழ் சிறை தண்டனை மற்றும் அபராதம் (Imprisonment and fine) விதிக்கக்கூடிய குற்றமாகும் (Offence).

மேலும் இம்மாதிரி நடத்தை விதிகளை புறக்கணிப்பதன் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் நடவடிக்கைகளில் சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துவதானது, சட்டப்பிரிவு 162–ன்கீழ் ஓராண்டு வரை சிறைத் தண்டனை (Imprisonment) மற்றும் ரூ.10000/– வரை அபராதம் (Fine) விதிக்கக்கூடிய குற்றமாகும்.

எனவே தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வகையான நிகழ்வுகளுக்கு இடம்தராது, நடத்தை விதிகளை முழுவதுமாகவும் முறையாகவும் பின்பற்றிடவும், சங்கத்தின் தேர்தல்களை, சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படை தன்மையுடனும், சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்துவதையும், அவ்வாறு நடத்தப்படுவதை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும் உறுதி செய்திடவும் தாங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் சங்கங்களுக்கும், தொடர்புடைய அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கிட ஆணையம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பாக தங்கள் அளவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையினை (Action taken Report) 20.09.2022க்குள் அனுப்பிடவும் ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

**இணைப்பு : நடத்தை விதிகள் – 2 பக்கங்கள்**

# கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – 2018

## நடத்தை விதிகள் அறிவிப்பு

முன்னிலை : திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.344/2018/கூ.தே.5 நாள் : 05.09.2022

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் – கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் நடத்தை விதிகள் (Code Of Conduct) – அறிவித்தல்

-----

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988, விதி எண். 52–A(9)–ல் அதிகாரமளிக்கப்பட்டபடி கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் தேர்தல் நடத்தை விதிகளை அறிவிக்கிறது.

1) அடியிற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் தடை செய்யப்படுகின்றன (Prohibited) :

i) சங்கம் நடத்துவது தொடர்பான வாடிக்கையான நடவடிக்கைகள் (Usual Business) தவிர்த்து கொள்கை முடிவுகள் ஏதும் ( Policy decision) நிர்வாகக்குழு எடுத்தல்;

ii) சங்கத்தின் பொதுப்பேரவைக் கூட்டம் கூட்டுதல்;

iii) புதிய கிளைகள் ஏதும் தொடங்குதல்;

iv) சங்க உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதிச் சலுகைகள் (Financial Benefit) வழங்குதல்;

v) கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தொடர்பான புதிய நியமன ஆணைகள், பணியிட மாறுதல்கள், பதவி உயர்வு ஆணைகள் ஏதும் வழங்குதல் (அயல் பணியில் (On Deputation) இருக்கும் அரசு அலுவலர்களுக்கு இது பொருந்தாது);

vi) புதிய திட்டங்கள் அறிவித்தல் (Announcement of any New Schemes);

vii) புதிய திட்டங்கள் மற்றும் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டுதல் ( Laying of Foundation Stones of Projects or Schemes of any kind); மற்றும்

viii) சங்கத்திற்கு சொந்தமான அல்லது ஆளுகையிலுள்ள இடங்கள், கட்டிடங்கள் உள்ளிட்ட அசையாச் சொத்துக்கள் மற்றும் வாகனம், தளவாடம் போன்ற அசையும் சொத்து எதுவாக இருப்பினும் அச்சொத்தினை சங்கத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களோ அல்லது போட்டியிடும் வேட்பாளர்களுக்காக மற்றவர்களோ பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்த அனுமதித்தல்.

2) நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்/துணைத்தலைவர் ஆகியோருக்கு சங்கத்திலிருந்து வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின் அவை திரும்பப் பெறவேண்டும்.

3) இத்தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் திட்டம் வெளியிடப்பட்ட சங்கங்களுக்கு மட்டும் பொருந்தும். தேர்தல் திட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து புதிய நிர்வாகக்குழு பொறுப்பேற்கும் வரை (Assume Office) வரை இந்நடத்தை விதிகள் அமலில் இருக்கும்.

4) சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசர அவசிய மற்றும் தவிர்க்க முடியாத நிலையில் அது குறித்த இனங்களில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தில் விபரங்கள் தெரிவித்து (Relief Reasons) அனுமதிக்கான கோரிக்கை அனுப்பலாம்.

5) ஆணையத்தின் சட்டபூர்வ கட்டளையான மேலே குறிப்பிட்ட இந்நடத்தை விதிகளை தேர்தல் நடத்தும் சங்கங்கள் மேற்கொள்ள தவறும் நிலையில் அதற்கு பொறுப்பானவர்கள் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், பிரிவு 157(2) மற்றும் பிரிவு 162 (h)-ன் கீழ் சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டுமோ விதித்து தண்டிக்கப்படதக்கவராவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/—
ஆணையர்

ஆணையருக்காக

D:\RC 344-2018-CE5 code of conduct 05.03.2018.doc